தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் இலவச கண் பரிசோதனைமுகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் லோட்டஸ் கண் மருத்துவமனை, கோயமுத்தூர் இணைந்து வேளாண் பல்கலை மருத்துவமனை வளாகத்தில் 31-1-2015 அன்று மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நிகழ்த்தியது.

முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர், வேளாண்மை அவர்கள் முகாமை துவக்கி வைத்தார். பல்கலை மருத்துவர் அ. அருள்மொழி பங்கு பெற்றார். பொதுமக்கள், பல்கலை பணியாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உட்பட 270 நபர்களுக்கு இலவச கண் பரிசோதனை நடத்தி ஆலோசனை வழங்கப்பட்டது.

லோட்டஸ் மருத்துவமனை தலைமை மருத்துவர் திரு. எஸ்கே. சுந்தரமூர்த்தி தலைமையில் மருத்துவர்கள் ஏக்தா, ரூபாஸ்ரீ ஆகியோர் பரிசோதனை நிகழ்த்தினர். துளசி பார்மஸி சார்பில் இலவச இரத்த சர்க்கரை, இரத்த அழுத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சர்க்கரைக் கண் நோய், பார்வைக் குறைபாடு கண்டறிதல், மாறுகண், கண் புரை, திரவ அழுத்த நோய் (Glaucoma), லேசிக் சிகிச்சைஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

லோட்டஸ் கண் மருத்துவமனை சார்பில் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. என். ரங்கநாதன், டி. வினிதா, எம். கார்த்திக் ராஜன் மற்றும் வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் கிருஷ்ணன், பார்த்திபன், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் லதா, ஹேமா, சக்திவேல் ஆகியோர் இணைந்து முகாம் ஏற்பாடுகளை செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்